# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

*கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத பல்நோக்கு பிரிவு 01 சேவை வகுதிக்கு உரிய சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2024*

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் கடன் இணக்க சபைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் சிங்கள மொழிமூல 06 சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிகளுக்காக திறந்த அடிப்படையில் இணைத்துக் கொள்வதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்துக்கு அமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், கடன் இணக்க சபைத் திணைக்களம், இல. 35ஏ, கலாநிதி என். எம். பெரேரா மாவத்தை, கொழும்பு 08" என்ற முகவரிக்கு கிடைக்கப் பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத பல்நோக்கு பிரிவு 01 சேவை வகுதிக்குரிய சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்தல் (திறந்த) - 2024" எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2024.08.31 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**:- விண்ணப்பம் ஒன்றோ அல்லது அது தொடர்பான கடிதம் ஒன்றோ தபாலில் தொலைந்து போனமை தொடர்பாகவோ அல்லது தாமதமாகியமை தொடர்பாகவோ மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப் படமாட்டாது.

01. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**:

(i) இந்தப் பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். (ஓய்வூதியமுடையது என்பது எதிர்வரும் காலத்தில் அரசினால் மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு அமைய வேறுபடும்.)

(ii) இந்தப் பதவிக்காக நியமனம் பெறும் அலுவலர் ஒருவர் 03 வருட தகுதிகாண் காலம் ஒன்றுக்கு உட்படுவதுடன், மேற்படி காலப்பகுதிக்குள் முதலாவது வினைத்திறன் காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(iii) அரசாங்க நிருவாக சுற்றுநிரூப இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு இடைநேர் விளைவான சுற்றுநிரூபங்கள் என்பவற்றுக்கு ஏற்ப உரிய மட்டத்திலான மொழித் தேர்ச்சியினை 05 வருட காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அரச கரும மொழியல்லாத வேறு மொழி மூலம் ஒன்றினூடாக சேவைக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட அலுவலர்கள் 03 வருட காலப்பகுதிக்குள் ஒரு அரச கரும மொழி தொடர்பான தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன், ஏனைய மொழி தொடர்பான தேர்ச்சியினை ஐந்து வருட காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கும், திணைக்களம் சார் ஏனைய கட்டளைகளுக்கும் இந்த நியமனம் கட்டுப்படும்.

02. **ஆட்சேர்ப்புத் தரம் - III ஆம் தரம்**:

03. **சம்பள அளவுத்திட்டம்**: இந்தப் பதவிக்கு, 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றுநிரூபமாகிய சம்பளச் சுற்றுநிரூபத்திற்கு அமைய MN 02-2016, ரூபா 28,940-10 × 300 - 11 × 350 - 10 × 560 - 10 × 660 - ரூபா 47,990.00 தொகை (மாதாந்த) சம்பள அளவுத்திட்டம் ஒன்று உரித்தாகும். தரப்படுத்தல் முறைக்கு அமைய ஆரம்ப சம்பளப் படிமுறை ரூபா 28,940.00 தொகை ஆகும்.

04. **தகைமைகள்**:

I. **கல்வித் தகைமைகள்** :

(அ) சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம் உட்பட ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரம்) பரீட்சையில் சகல பாடங்களிலும் (பொது அறிவுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த) ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். (பழைய பாடத் திட்டத்தின் கீழ் 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்து இருத்தல் போதுமானது.)

II. **தொழில் தகைமைகள் :**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் பயிற்சி வழங்கல் அதிகார சபை, தொழில்நுட்பக் கல்லூரி, அரசாங்க பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றினால் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் பயிற்சி கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்து தொடர்பான 06 மாதங்களுக்குக் குறையாத பாடநெறி ஒன்றினைக் கற்றிருத்தல்

அல்லது

க. பொ. த. (சா.தரம்) பரீட்சையில் தட்டெழுத்து மற்றும் சுருக்கெழுத்து ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

அல்லது

தொழில்நுட்பக் கல்லூரிகளில் செயலாளர் நடைமுறைப் பாடநெறியைக் கற்று நீதிமன்றம் சாராத அலுவலர்களைப் பயிற்றுவிக்கும் நிறுவனம் ஒன்றில் சுருக்கெழுத்து மற்றும் தட்டெழுத்து தொடர்பாக தொடர்ந்தும் 06 மாத காலப் பாடநெறி ஒன்றினைக் கற்று மேற்படி பாடநெறிக்கு அமைய நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் அல்லது நீதிமன்றம் ஒன்றில் ஆறு (06) மாத கால செயன்முறைப் பயிற்சி ஒன்றினைப் பெற்றிருத்தல்.

III. **அனுபவம் :**

விசேட தகைமை ஒன்றாகக் கருதப்படும்.

05. **வயதெல்லை:** விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்தன்று 18 வயதுக்குக் குறையாமலும் மற்றும் ஆகக்கூடியது 30 வயதுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும்.

06. **உடல் தகைமைகள் :** இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் பணி புரிவதற்குப் பொருத்தமான சிறந்த உடல் மற்றும் உளத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

07. **ஏனைய தகைமைகள்:**

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

(iii) பதவிக்கு இணைத்துக் கொள்வதற்காக தேவையான சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில் சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக சான்றிதழ்களின் பிரதிகளை விண்ணப்பப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

08. **ஆட்சேர்ப்பு முறை:** விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தினைக் கோரும் மொழி மூலமே தொழில் மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்காகத் தோற்றுதல் வேண்டும்.

08.1 **தொழில்சார் பரீட்சை:** கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளர் அல்லது அவரினால் அனுமதிக்கப்படும் நிறுவனம் ஒன்றின் ஊடாக நடாத்தப்படும் தொழில் சார் பரீட்சை ஒன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

**தொழில்சார் பரீட்சை தொடர்பான விபரங்கள் :**

| | பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடைவதற்காக புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | சுருக்கெழுத்து (சிங்களம்) | 45 நிமிடங்கள் | 100 | 40% |
| 02 | தட்டெழுத்து (சிங்களம்) | 20 நிமிடங்கள் | 100 | 40% |

பரீட்சைக்கான பிரதான பாடப் பரப்பு:

| | பாடத்துறை | பாடப் பரப்பு |
|---|---|---|
| 03 | சுருக்கெழுத்து (சிங்களம்) | 5 நிமிடங்களுக்குள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தி ஒன்றினை நிமிடம் ஒன்றுக்கு 60 சொற்கள் எனும் வேகத்தில் சுருக்கெழுத்தில் பதிவு செய்து மேற்படி பதிவுகளை நிமிடம் ஒன்றுக்கு 08 சொற்கள் எனும் வேகத்தில் பொதுவான முறையில் எழுதும் ஆற்றலினை அளவிட்டுப் பார்க்கும் பரீட்சை ஒன்றாகும். |
| 04 | தட்டெழுத்து (சிங்களம்) | கிட்டத்தட்ட 400 சொற்களைக் கொண்ட உரை ஒன்றினை சரியான முறையில் 20 நிமிடங்களுக்குள் நிமிடம் ஒன்றுக்கு 20 சொற்கள் எனும் வேகத்தில் தட்டெழுத்துச் செய்யும் ஆற்றலினை அளவிட்டுப் பார்க்கும் பரீட்சை ஒன்றாகும். |

08.2 **தகைமையினை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சை** :

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளரினால் நியமனம் செய்யப்படும் தகைமையினை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைகள் சபை ஒன்றின் மூலம் புள்ளிகள் வழங்கப்படும்.

**தகைமையினை மதிப்பிடுவதற்கான நேர்முகப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் முறை :**

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள் | ஆகக் கூடிய புள்ளிகளின் எண்ணிக்கை | சித்தியடை வதற்காக புள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01. மேலதிக கல்வித் தகைமைகள் | 10 | |
| 02. மேலதிக தொழிற் தகைமைகள் | 20 | |
| 03. மொழி அறிவு (சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி தொடர்பிலான தேர்ச்சி) | 10 | |
| 04. கணினி அறிவு | 15 | ஏற்புடையதன்று |
| 05. அனுபவம் | 40 | |
| 06. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்திய தகைமைகள் | 05 | |
| மொத்தம் | 100 | |

08.3 **பொதுவான நேர்முகப் பரீட்சை** :-

கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் செயலாளரினால் நியமனம் செய்யப்படும் நேர்முகப் பரீட்சைகள் சபை ஒன்றின் ஊடாக தகைமைகளைப் பரீட்சித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதுடன் புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

**குறிப்பு**: தொழில்சார் பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளுள் வெற்றிட எண்ணிக்கையின் இரு மடங்கானோர் தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவர். தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சை மற்றும் தொழில்சார் பரீட்சை ஆகிய இரண்டிலும் பெற்றுக்கொள்ளப்படும் மொத்தப் புள்ளிகளின் திறமை அடிப்படையிலும் மற்றும் நிலவும் வெற்றிட எண்ணிக்கைக்கு அமையவும் பதவிக்காக இணைத்துக்கொள்ளப்படுவர்.

09. விண்ணப்பப்படிவத்தினை, செ. மீ. 22 × 29 (A4) அளவிலான தாள் ஒன்றினைப் பயன்படுத்தித் தயாரித்தல் வேண்டும் என்பதுடன், 1 - 5 வரையான தலைப்புக்கள் முதலாவது பக்கத்திலும், 6-15 வரையான தலைப்புக்கள் இரண்டாவது பக்கத்திலும், 16 முதல் ஏனைய தலைப்புக்கள் மூன்றாவது பக்கத்திலும், உள்ளடங்குமாறு தயாரித்தல் வேண்டும். அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்திலேயே தெளிவாக உள்ளடக்குதல் வேண்டும். சகல வகையிலும் பூர்த்தி செய்யப்படாத, அடிப்படைத் தகைமைகள் அற்ற, உரிய தினத்தன்று கிடைக்கப் பெறாத மற்றும் உரிய மாதிரிப் படிவத்தினை ஒத்திராத, விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றினை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுடையதாக அமையும். மேலும் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தினை ஒத்துள்ளதா என்பது தொடர்பாக விண்ணப்பதாரி கவனம் செலுத்துதல் வேண்டும் என்பதனையும், அவ்வாறின்றேல் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படலாம் என்பதனையும், மேலும் அறியத்தருகின்றேன். விண்ணப்பப்படிவத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையத் தயாரித்தல் வேண்டும். விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை

தொடர்பில் அறியத்தரப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக்கூடிய நட்டங்கள் மற்றும் இழப்புக்களை விண்ணப்பதாரிகளே ஏற்றல் வேண்டும்.

**கவனம் செலுத்தப்பட வேண்டியது** : கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளின் விண்ணப்பம் தொடர்பில் கவனம் செலுத்தப்படமாட்டாது.

10. **பரீட்சைக் கட்டணங்கள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பரீட்சைக் கட்டணமாக ரூபா 1,500.00 தொகையினை மக்கள் வங்கியின் நகர மத்தியக் கிளையில் கடன் இணக்க சபைத் திணைக்களச் செயலாளரின் பெயருக்கு கிடைக்கப் பெறும் வகையில் 176100159026581 ஆம் நடைமுறை கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்தல் வேண்டும். உரிய பற்றுச்சீட்டின் மூலப் பிரதியினை விண்ணபத்தின் உரிய இடத்தில் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

11. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாற்றுகை நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிரூபங்கள் மற்றும் கடன் இணக்க சபைத் திணைக்களத்தின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் சாராத பல்நோக்கு பிரிவு 01 சேவை வகுதிக்கான சுருக்கெழுத்தாளர் (சிங்களம்) பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் நிபந்தனைகள் என்பன ஏற்புடையனவாகும்.

(திருமதி) சுபாஷினீ தயானந்த,
செயலாளர்,
கடன் இணக்க சபைத் திணைக்களம்.

2024, ஓகத்து 02.

| |
|---|
| இல. ........................................<br>(அலுவலக உபயோகத்துக்காக) |